1971 டிசம்பர் 16]

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, நர்ஸ் என்பதற்குத் தமிழிலே 'செவிலி' என்ற சொல்தான் பொருத்த மான சொல். அது குறிப்பாக பெண்களுக்குரிய சிறப்புச் சொல்லாகும். இந்த பணிக்கு பெண்கள் வராத காலம் ஒன்றிருந்தது. அப்பொழுது இதிலே ஆண்கள் ஈடுபடுத்தப் பட்டார்கள். இப்பொழுது ஏராளமாகப் பெண்கள் வருகிறார்கள். இந்த பணிக்கு என்பதால் ஆண்கள் இதிலே போட்டியிட மாட்டார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

திரு. எம். சுரேந்திரன் : சார், மருத்துவமனைகளிலே இவ்வளவு படுக்கைக்கு ஒரு நர்ஸ் என்று விகிதாச்சாரம் இருக்கிறது. தற்போது இருக்கும் விகிதாச்சாரத்தை இன்னும் மாறுபடுத்த வேண்டுமென்று இது சம்பந்தமாக ....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஆண் நர்ஸ்களைப் பற்றிய கேள்வி. செலவென்டாக இல்லையே, எப்படிப் பதில் சொல்வது ?

திரு. எம். சுரேந்திரன் : அந்த வகையிலே ஆண் நர்சுகளைப் பயிற்றுவித்து இன்னும் நர்ஸ்கள் அதிகமாகத் தேவைப்படுவதால், நர்சுகளுக்கு பங்கிடப்படும் இந்த படுக்கை விகிதாச்சாரத்தை மாற்றும் முறையில் அதிகப்படுத்தி, பெண் நர்சுகளோடு ஆண் நர்சுகளுக்கும் சேர்த்து பயிற்சியளிப்பது நல்லது அல்லவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, பெண்கள் இப்பொழுது பயிற்சி பெற்றவர்கள் கிட்டத்தட்ட 500 பேருக்கு மேல் 650 வரையில் வேலையில்லாமல் இருக்கிறார்கள். அவர் களெல்லாம் நர்ஸ் பயிற்சி பெற்றுவிட்டு, எ.என்.எம். ஆக, அதை விடக் குறைந்த ஊதியத்தில் வேலை செய்கிறார்கள். அப்படிப் பயிற்சி பெற்றவர்களுக்கு முதலிடம் கொடுக்கக் கடமைப்பட்டிருக் கிறோம். ஆகவே, ஆண்களுக்கு இப்பொழுது இந்த வேலை கிடைக்காது.

தமிழ்நாடு அரசிதழைத் தமிழில் வெளியிடல்

*** 460 வினா.—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

அரசாங்க கெஜட்டைத் தமிழில் வெளியிடும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தமிழ்நாடு அரசின், அரசிதழின் அனைத்து பாகங்களையும் தமிழிலேயே வெளியிட வேண்டும் என்றும், இதனை பல கட்டங்களில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும், முதல் கட்டமாக அரசிதழ் பாகம் ஒன்றின் தமிழாக்கத்தினை வெளியிட எடுத்துக் கொள்ளலாம் என்றும் அரசு ஏற்கனவே ஆணை பிறப்பித்துள்ளது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, எல்லாத் துறைகளிலும் தமிழ் மணம் கமழச் செய்யும் நம்முடைய அரசு, மத்திய அரசு இந்தியிலும், ஆங்கிலத்திலும் கெஜட் அச்சிடுவதைப்போல் நமது அரசு தமிழ், ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகளிலும் அச்சிடுவதற்கு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : நான் ஏற்கனவே அறிவித்ததைப்போல், முதல் பாகத்தை முதலில் தமிழில் வெளியிட அரசு ஆணை பிறப்பித்து, அதற்கான நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, மற்றைய மாநிலங்கள் வெளியிடும் அரசிதழ்கள் அந்தந்த மாநில மொழியிலே வெளியிடப் படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : விவரம் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

திரு. கே. என். குமாரசாமி : தலைவரவர்களே, தமிழக அரசாங்கம் தமிழிலே வெளியிடும் குறிப்புகள் ஏராளமாக இருக்கும்பொழுது, அதை ஆங்கிலத்திலே மட்டும் வெளியிடுவது தமிழை அமலாக்கும் கொள்கையில் அரசாங்கம் தாமதப்படுத்துகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே, தமிழில் வெளியிட வேண்டுமென்ற கொள்கையில் அரசு தீவிரமாக இருப்பதால்தான் முதல் பாகத்தைத் தமிழில் வெளியிடுவதற்காக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், தமிழக அரசு வெளியிடும் இந்த கெஜட் இருக்கிறதே, அதன் கடைசியான வெளியீடு எப்பொழுது வந்தது ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தனிக்கேள்வி போடவும்.

தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டத்தின் கீழ் மருத்துவமனைகள்.

*461 வின.—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1971-ம் ஆண்டு, ஏப்ரல் முதல் தேதியில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டத்தின் கீழ் மருத்துவமனை கட்ட இருந்து கைவிடப்பட்ட திட்டங்கள் எவை ?

(இ) அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. என் வி. நடராசன் : (அ) & (இ) தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகத்தின் நிதிப் பற்றுக்குறையின் காரணமாக கீழ்க்காணும் இடங்களில் மருத்துவமனை கட்டுவதற்கான திட்டங்கள் கைவிடப்பட்டுவிட்டன.